**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**PG DEGREE EXAMINATION DECEMBER 2023**
(Third Semester)

**TRANS DISCIPLINARY COURSE**
(Common to PG Programmes)

**PADAIPPILAKKIYAMUM VIMARCHANAKKALAIYUM**

Time: Three Hours Maximum: 50 Marks

**SECTION-A (5 Marks)**
Answer **ALL** questions
**ALL** questions carry **EQUAL** marks (5 x 1 = 5)

1. தத்துவ ரீதியிலான இலக்கிய விமரிசனத்தை முன்வைத்த முன்னோடியான ஜெர்மானிய அறிஞர்
   i) ஸாந்த் போவ் ii) கதே
   iii) கோலரிட்ஜ் iv) ஹென்றி ஜேம்ஸ்

2. 'உரையிடையிட்ட பாட்டிடைச் செய்யுள்' எனும் சிறப்பினைப் பெற்ற இலக்கியம்
   i) சிலப்பதிகாரம் ii) மணிமேகலை
   iii) சீவகசிந்தாமணி iv) குண்டலகேசி

3. பேச்சுத் தமிழில் தம்முடைய இருபத்தைந்தாண்டு வாழ்க்கைக் குறிப்புகளை எழுதியவர்
   i) வீரமா முனிவர் ii) பாரதியார்
   iii) ஆனந்தரங்கம் பிள்ளை iv) கா.தாண்டவராய முதலியார்

4. கவிதை நூல்களைக் கதாகலாட்சேபப் பாணியில் தமிழ் வசனத்தில் ஆக்கித்தந்தவர்
   i) பிரதாப முதலியார் ii) பாரதியார்
   iii) செல்வகேசவராய முதலியார் iv) ஆறுமுக நாவலர்

5. 'பொய்த்தேவு' எனும் நாவலின் ஆசிரியர்
   i) எஸ்.வி.வி ii) கா.நா.சு
   iii) தி.ஜா iv) கு.பா.ரா

**SECTION - B (15 Marks)**
Answer **ALL** Questions
**ALL** Questions Carry **EQUAL** Marks (5 x 3 = 15)

6. அ இலக்கிய விமரிசகனின் 'தற்சார்பு' பற்றி க.நா.சுவின் கருத்து என்ன?
   (அல்லது)
   ஆ இலக்கிய விமரிசனத்தின் தேவைகள் குறித்தெழுதுக.

7. அ 'மாய எதார்த்தவாதம்' என்றால் என்ன?
   (அல்லது)
   ஆ 'பெண்ணியம்' – விளக்கம் தருக.

8. அ மூன்றாம் பாலினத்தவரின் குரல்கள் இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் பதிவு செய்யப்படுகின்றன?
   (அல்லது)
   ஆ தமிழில் 'சூழலியம்' சார்பு புனைகதையாளர்கள் இருவரை அறிமுகம் செய்க.

9. அ சிறுகதைக்கான வரையறை என்ன?
   (அல்லது)
   ஆ 'தனிநபர்' நாடகம் - விளக்கம் தருக.

**Cont...**

10. அ 'கேமராவின் கோணம்' என்றால் என்ன? வகைப்படுத்துக.

(அல்லது)

ஆ தினசரி பத்திரிக்கைக்கு ஏற்றவாறு நீவிர் வாசித்தறிந்த புத்தகம் ஒன்றினை விமரிசனம் செய்க.

**SECTION -C (30 Marks)**

Answer **ALL** questions

**ALL** questions carry **EQUAL** Marks (5 x 6 = 30)

11. அ தமிழில் வசனநடை வளர்ந்த விதம் குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

ஆ 'இலக்கிய உருவம்' குறித்தான க.நா.சுவின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

12. அ 'தலித் அழகியல்' விளக்கம் தந்து, தற்காலத் தமிழிலக்கியங்களில் அதன் தாக்கத்தினை விவரிக்க.

(அல்லது)

ஆ அண்மையில் தமிழ்மொழியில் வெளிவந்த புதினம் ஒன்றினை, இலக்கியக் கோட்பாட்டு பின்புலத்துடன் ஆய்க.

13. அ காலந்தோறும் இலக்கிய உருவாக்கத்தில் வினையாற்றும் 'படைப்பு அரசியல்' குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

ஆ புலம்பெயர்வின் 'வலியும் ரணமும்' தமிழ்ப்படைப்பாக்கத்தில் பதிவுற்றுள்ள விதங்களை விவரிக்க.

14. அ இலக்கிய ஆக்கத்தில் 'வட்டார வழக்கு' சிறப்பிடம் பெறும் தன்மைகளை விவரித்தெழுதுக.

(அல்லது)

ஆ தமிழகத்தில் நிகழ்த்தப் பெறும் நாடகங்களை வகைப்படுத்தி, நிகழ்த்துதல் முறையிலுள்ள இடர்ப்பாடுகள் குறித்து விரிவாக எழுதுக.

15. அ 'மாற்று அரசியலை' முன்வைத்து அண்மையில் தமிழில் வெளிவந்த திரைப்படம் ஒன்றினை விமரிசனம் செய்க.

(அல்லது)

ஆ திரைப்பட உருவாக்கத்தில் 'திரைக்குப் பின்னால்' உள்ளவர்களின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

Z-Z-Z END